தமிழ்நாடு அரசு

# மூன்றாம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

### தொகுதி 1

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

Tamil 3rd-std_Term3.indd 1 7/20/2019 5:42:59 PM

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - *2019*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல்
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம்

*© SCERT 2019*

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



Tamil 3rd-std_Term3.indd 2 7/20/2019 5:43:00 PM

# முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

# நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.


நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!






Tamil 3rd-std_Term3.indd 4 7/20/2019 5:43:01 PM

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



Tamil 3rd-std_Term3.indd 5 7/20/2019 5:43:01 PM



## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



Tamil 3rd-std_Term3.indd 6 7/20/2019 5:43:01 PM

# தமிழ்

## மூன்றாம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

### தொகுதி 1






Tamil 3rd-std_Term3.indd 7 7/20/2019 5:43:02 PM

# முன்னுரை

**குழந்தைகள் பூ போன்றவர்கள்! அற்புதமானவர்கள்!**

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தனித்திறன் என்னும் முத்தைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள். அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறனாகிய முத்துகளைக் கண்டு வெளிக் கொணர்வதே உண்மையான கல்வி.



தமிழையும் தமிழர்களையும் போற்றும் வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில் கொண்டு இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணப் படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மேலும் குழந்தைகள் தயக்கமின்றித் தமது எண்ணங்களை வெளிப்படுத்த உதவி புரியும் **வாங்க பேசலாம்**.





குழந்தை வகுப்பறைச் சூழலைத் தாண்டிச் சிந்திப்பதுடன் அதனை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ள உதவும் **சிந்திக்கலாமா?**

குழந்தைகள் விளையாடிக் கொண்டே தங்களது மொழித் திறனை வளப்படுத்திக் கொள்ள உதவும் **மொழியோடு விளையாடு**.







Tamil 3rd-std_Term3.indd 8 7/20/2019 5:43:03 PM





ஒவ்வொரு குழந்தையின் படைப்புத் திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் **கலையும் கைவண்ணமும்.**

திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் **செயல்திட்டம்.**







மாணவர்கள் புதிய செய்திகளை அறிந்து கொள்ள உதவும் **அறிந்து கொள்வோமா?**

ஒற்றுமையுடன் சேர்ந்து செயல்பட உதவும் **இணைந்து செய்வோம்**

பொருத்துவோமா?

| | |
|---|---|
| 1. நாடும் வீடும் | வேண்டுமே |
| 2. வளமும் நலமும் | சேமிப்போம் |
| 3.இல்லத்தில் நீரை | மழையாகுமே |
| 4. உற்ற துணை | செழிக்கவே |
| 5. உயிராய் எண்ண | நிறைந்திட |

புதிய பாடநூலில் இவைபோன்ற பல புதிய செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்க வேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப் பகுதியிலும் பெற வேண்டிய கற்றல் விளைவுகள் பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப் பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

**பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்!**

- உங்கள் திறன் பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்திப் பாடநூலில் உள்ள விரைவுக் குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்.
- திரையில் தோன்றும் கேமராவைப் பாடநூலின் QR Code அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம். அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாடப் பகுதிகளைப் பயன்படுத்தலாம்.

QR GUIDE

குறிப்பு: இணையச்செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஒரு QR code Scanner பயன்படுத்தவும்.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும்
இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும்
ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த
சமூகம் அமையட்டும்

வாழ்த்துகள்..!

ஆக்கியோர்.





Tamil 3rd-std_Term3.indd 9 7/20/2019 5:43:04 PM

# பொருளடக்கம்


| வ எண் | தலைப்பு | பக்கம் | மாதம் |
|---|---|---|---|
| 1. | உள்ளங்கையில் ஓர் உலகம் | 1 | ஜனவரி |
| 2. | தூக்கணாங்குருவியும் ஒட்டகச்சிவிங்கியும் | 7 | ஜனவரி |
| 3. | வீம்பால் வந்த விளைவு | 15 | பிப்ரவரி |
| 4. | மழைநீர் | 24 | பிப்ரவரி |
| 5. | காகமும் நாகமும் | 29 | பிப்ரவரி |
| 6. | நல்வழி | 36 | மார்ச் |
| 7. | தமிழ்மொழியின் பெருமை | 42 | மார்ச் |
| 8. | அறிவூட்டும் தொலைக்காட்சிச் செய்திகள் | 48 | மார்ச் |
| | பட விளக்க அகரமுதலி | 55 | |
| | அகரமுதலி | 57 | |






P1P9IX மின்னூல்

AF8VQE மதிப்பீடு

B313_3_TAMIL_LANG இணைய வளங்கள்

# 1 உள்ளங்கையில் ஓர் உலகம்

உலகைச் சுற்றிக் காட்டிடுவேன்
உனக்கு மகிழ்ச்சியைத் தந்திடுவேன்
என்ன வேண்டும் என்றாலும்
எண்ணும் முன்னே சொல்லிடுவேன்

இணைய வழியில் அனைவரையும்
இணைந்தே இருக்கச் செய்திடுவேன்
கடிதம் அனுப்ப வேண்டுமென்றால்
விரைந்தே அனுப்பத் துணைபுரிவேன்

தகவல் களஞ்சியம் நான்தானே
தரணி போற்றி மகிழ்ந்திடுமே
உலகைச் சுருக்கி உன்கையில்
உலவிடும் கணினி நான்தானே

என்றும் ஓய்வு எனக்கில்லை
எதிலும் சோர்வு என்றில்லை
எந்தப் பொருளின் செய்தியையும்
எடுத்துத் தருவேன் ஒருநொடியில்

உள்ளங்கையில் ஓர் உலகம்
உள்ளதைக் காட்டும் கண்ணாடி
என்றே என்னை எல்லாரும்
ஏற்றம் கொண்டே அழைத்திடுவார்

4WGBES

## பாடல் பொருள்

கணினி நமக்குத் தகவல்களை உடனடியாகத் தருவதால் மன மகிழ்வு ஏற்படுகிறது. இணையத்தின் மூலமாக நல்ல நட்பை உருவாக்குகிறது. கடிதப் போக்குவரத்தை விரைந்து செயல்படுத்துகிறது. கணினி, சிறந்த தகவல் களஞ்சியமாகச் செயல்படுகிறது. உலகையே உள்ளங்கையில் தரவல்லது. ஓய்வில்லாமல் உழைப்பதால், எந்தச் செய்தியைக் கேட்டாலும் உடனடியாக எடுத்துத் தருகிறது. உள்ளதை உள்ளபடி காட்டும் கண்ணாடியாகக் கணினி செயல்படுகிறது.



Tamil 3rd-std_Term3.indd 1 7/20/2019 5:43:06 PM

## சொல் பொருள்

| | | |
|---|---|---|
| தரணி | – | உலகம் |
| சோர்வு | – | களைப்பு |
| ஏற்றம் | – | உயர்வு |



### வாங்க பேசலாம்

பாடலை இசை நயத்துடன் பாடி மகிழ்க.

இன்றைய சூழலில் கணினியின் தேவை குறித்துக் கலந்துரையாடுக.



## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. ஏற்றம் என்ற சொல்லின் பொருள் ........................................

   (அ) சோர்வு (ஆ) தாழ்வு

   (இ) உயர்வு (ஈ) இறக்கம்

2. என்று + இல்லை –இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது. ........................................

   (அ) என்றில்லை (ஆ) என்றும்இல்லை

   (இ) என்றுஇல்லை (ஈ) என்றல்லை

3. முன்னே என்ற சொல்லின் எதிர்ச்சொல் ................................

   (அ) எதிரே (ஆ) பின்னே

   (இ) உயரே (ஈ) கீழே

TPNZTJ

4. கணினி ........................................ வழியே அனைவரையும் இணைக்கிறது.

   (அ) தகவல் களஞ்சியம் (ஆ) செய்தி

   (இ) கடிதம் (ஈ) இணையம்

## வினாக்களுக்கு விடையளிக்க.

1. தகவல்களை எதன் வழியே எளிமையாகப் பெற முடியும்?
2. கணினியின் பயன்கள் குறித்து இப்பாடலின் வழியே நீ அறிந்து கொண்டவற்றைக் கூறுக.

ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுவோமா?

| காட்டிடுவேன் | தந்திடுவேன் |
|---|---|
| ___________ | ___________ |
| ___________ | ___________ |

3. விசைப்பலகையிலுள்ள எழுத்துகளைக்கொண்டு சொற்களைக் கண்டறிவோமா?

| | | | | |
|---|---|---|---|---|
| இ | க | வ | ம் | த |
| உ | தி | ணை | ய | ணி |
| னி | ல | ல் | டி | ரை |

| | |
|---|---|
| திரை | |
| | |
| | |

## சொல் விளையாட்டு

**அலைபேசியோடு தொடர்பில்லாத எழுத்துகளை நீக்கிச் சொற்களை உருவாக்குக.**

**எடுத்துக்காட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| ~~நி~~ | ~~னி~~ | தி | ~~மி~~ | ரை |

திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒ | பு | ள | ல | பு | ம் |
| ஆ | அ | ள | ழ | ய் | கா |
| ஃ | னை | ணை | ய | இ | ம் |
| னு | கா | க | மு | ல் | நூ |
| கை | மை | நு | து | பு | வி |

## மீண்டும் மீண்டும் சொல்லலாமா?

1 அலையில் மிதந்த மீனை
வலையில் பிடிச்சா விழுகல
கலகலன்னு சிரிப்பு வரல



2 மரக்கிளைய கரத்தால் பற்றி
தொங்கயில கையச் சுழற்றினதானல
கீழே விழுந்தேன்.




3 காத்துல விழுந்த பழத்துல
சுவையில்லனு சொல்ல முடியல
இந்த நினைப்பில நண்பன்
விழுந்தான் பள்ளத்தில



## கலையும் கைவண்ணமும்

கொடுக்கப்பட்ட படத்திற்கு வண்ணம் தீட்டி மகிழ்க.





Tamil 3rd-std_Term3.indd 4 7/20/2019 5:43:10 PM

# குழு விளையாட்டு

**சொற்களைச் சொல்! மகுடம் சூட்டிக் கொள்!**

மாணவர்களை இரு குழுவாகப் பிரித்துக் கொள்க. சொற்களுக்குரிய அட்டைகளை
















என்றவாறு தயார் செய்த கொள்க. எழுத்துகளுக்குரிய அட்டைகளை தி, பு, த, ந, பி என்றவாறும் தயார் செய்து கொள்க.












முதல் குழுவில் உள்ளவர்கள் எழுத்துகளை ஒவ்வொருவராகக் கூற இரண்டாம் குழுவில் உள்ளவர்கள் உரிய சொற்களைக் கூறச் செய்க. பின்னர், குழுவை மாற்றி விளையாட்டைத் தொடர வேண்டும். சரியாகச் செய்த மாணவர்களுக்கு மகுடம் வைத்துப் பாராட்டுக.

# இணைந்து செய்வோம்

**பின்வரும் செயலிகளுக்குப் பொருத்தமான படத்தினைப் பொருத்துக**

1. மின் அஞ்சல்
2. புலனம்
3. முகநூல்

## அறிந்து கொள்வோம்

அலைபேசியை முதன்முதலில் கண்டறிந்தவர் மார்ட்டின் கூப்பர்

மின்னல் வெட்டும்போது அலைபேசியைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், அலைபேசி இடிதாங்கிபோல் செயல்பட்டு மின்னலை உங்கள் பக்கம் ஈர்த்துவிடும்.



## சிந்திக்கலாமா?

இன்று வாணியின் பிறந்த நாள். வாணியின் மாமா வெளியூரில் வசிக்கிறார். பிறந்தநாளுக்கு அவர் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவளுடைய மாமா எப்படி வாழ்த்துகள் தெரிவிப்பார்?




## செயல் திட்டம்

கணினியில் புதிர் விளையாட்டுகளை விளையாடி மகிழ்வோம்.

# 2 தூக்கணாங்குருவியும் ஒட்டகச்சிவிங்கியும்

காட்டில் இருந்த பெரிய மரம் ஒன்றின் கிளையில் தன் குஞ்சுகளுடன் கூட்டில் தூக்கணாங்குருவி ஒன்று வசித்து வந்தது. அதன் குஞ்சுகள், கீச் …… கீச் …. என்று ஒலி எழுப்பி மகிழ்ச்சியுடன் இருந்தன. அப்போது அந்த வழியாக ஒட்டகச்சிவிங்கி ஒன்று வந்தது.

ஒட்டகச்சிவிங்கி — அப்பாடா… என்ன வெயில்… என்ன வெயில் …. இந்த மரத்தின் அடியில் கொஞ்ச நேரம் ஒதுங்கலாம். என நினைத்தது. அப்போது தூக்கணாங்குருவி குஞ்சுகள் மகிழ்ச்சியுடன் சத்தமிட்டுக் கொண்டிருந்தன… என்ன ஒரே சத்தம்! என ஒட்டகச்சிவிங்கி மேலே பார்த்தது. மரக்கிளையில் உள்ள கூட்டில் இருந்த தூக்கணாங்குருவிக் குஞ்சுகள் சத்தமிட்டுக் கொண்டு இருப்பதைப் பார்த்து கோபம் கொண்ட, ஒட்டகச்சிவிங்கி மரக்கிளையைப் பிடித்து உலுக்கியது.






Tamil 3rd-std_Term3.indd 7 7/20/2019 5:43:12 PM

**தூக்கணாங்குருவி** ஏ! ஒட்டகச்சிவிங்கியே! ஏன் மரக்கிளையை உலுக்குகிறாய்? என் கூட்டிலுள்ள குஞ்சுகள் பயப்படுகின்றன.

**ஒட்டகச்சிவிங்கி** உன் குஞ்சுகள் கத்துவது எனக்குப் பிடிக்கவில்லை.

(அப்போது… தேனீ ஒன்று பறந்து வந்து மரத்தில் உள்ள பூவில் அமர்ந்தது)


**தேனீ** ஒட்டகச்சிவிங்கியே! மரம் அனைவருக்கும் பொதுவானது. தூக்கணாங்குருவி கூடு கட்டி வாழ்கிறது. உனக்கு ஓய்வெடுக்க நிழல் தருகிறது. எனக்கு இம்மரத்தில் உள்ள பூக்களில் இருந்து தேன் கிடைக்கிறது. எனவே நாம் அனைவரும் நண்பர்களாக இருப்போம்.

**ஒட்டகச்சிவிங்கி** இல்லை ! இல்லை ! நான் உங்களுடன் சேர முடியாது. எனக்கு இந்தக் குஞ்சுகள் கத்துவது பிடிக்கவில்லை.

(மீண்டும் மரக்கிளையை ஒட்டகச்சிவிங்கி உலுக்கியது)

தூக்கணாங்குருவிக் குஞ்சுகள் பயந்து, காப்பாத்துங்க….
காப்பாத்துங்க என மீண்டும் அலறின.

**தேனீ** நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். அருகில் உள்ள குளத்தில் புத்திசாலித் தவளை வாழ்ந்து வருகிறது. அதனிடம் சென்று உதவி கேட்போம்.



(தேனீ, ஒட்டகச்சிவிங்கியின் அடாத செயலை தவளையிடம் கூறியது. தூக்கணாங்குருவியும் தன் நிலையைக் கூறித் தவளையிடம் உதவி கேட்டது)

**தவளை** உங்களுக்குக் கட்டாயம் உதவுகிறேன். தண்ணீர் குடிக்க வரும் போதெல்லாம் இந்த ஒட்டகச்சிவிங்கியின் கால்களில் மிதிபட்டு எங்கள் இனம் அழிந்து போகிறது. அதனால், நாம் படும் துன்பம் அதற்குத் தெரியவில்லை. அதற்கும் அந்த நிலை ஏற்பட்டால்தான், தானாகவே புரிந்துகொள்ளும் போலிருக்கிறது.

(மறுநாள், ஒட்டகச்சிவிங்கி வழக்கம்போல் அந்த மரத்தின் அருகில் வருகிறது.)

**ஒட்டகச்சிவிங்கி** அப்பாடா! இன்று கொஞ்சம் வெயில் பரவாயிலே. அட, அது என்ன? அந்தத் தேனீக்கூட்டம் எப்போது பார்த்தாலும் ஙொய்…ஙொய்..னு சத்தம் போடுதே. இரு, இரு, இப்ப உங்களை என்ன செய்றேன் பாருங்க.

தேனீக்களின் கூட்டை ஒட்டகச்சிவிங்கி, தன் தலையால் தட்டிக் கலைக்கிறது. சினம் கொண்ட தேனீக்கள், ஒட்டகச்சிவிங்கியின் காதைக் கடிக்கின்றன. வலி பொறுக்கமுடியாமல், ஒட்டகச்சிவிங்கி அருகிலிருந்த குளத்தில் விழுகிறது. அது விழுந்ததால் அங்கிருந்த தவளைகள், அதன் உடலின்மீது அங்குமிங்கும் ஓடுகின்றன. தண்ணீரிலிருந்து தட்டுத்தடுமாறி எழுந்த ஒட்டகச்சிவிங்கி, மீண்டும் மீண்டும் கூச்சம் தாங்காமல் தண்ணீரில் விழுகிறது. தேனீக்கள் கொட்டிக்கொண்டே இருக்கின்றன.

**ஒட்டகச்சிவிங்கி** ஐயோ தேனீக்களே என்னை கொட்டாதீர்கள். தவளைகளே என் மீது ஏறாதீர்கள் – என்று கத்தியது

நமக்கு ஏற்பட்டதுபோலத்தானே அந்தத் தூக்கணாங்குருவிகளுக்கும் ஏற்பட்டிருக்கும். தங்கள் கூட்டைக் கலைத்ததால்தானே அந்தத் தேனீக்களும் என்னைக் கொட்டின. பாவம், அந்தத் தவளைகள் எத்தனை முறை அவற்றை நான் காலால் மிதித்திருக்கிறேன். எனக்கு வலித்ததுபோல அவற்றிற்கும் வலித்திருக்கும் என்று ஒட்டகச்சிவிங்கி, தான் செய்த தவற்றை எண்ணுகிறது. இனிமேல், யாருக்கும் தொல்லை தரமாட்டேன். துன்பம் செய்ய மாட்டேன் என்று உண்மையாகவே மனம் வருந்தியது ஒட்டகச்சிவிங்கி. மேலும், தன் தவற்றைப் பொறுத்துக் கொள்ளுமாறு அனைவரிடமும் வேண்டியது. பின்னர், அனைவரோடும் இணைந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தது.

**நீதிக் கருத்து: நல்லதே நினைப்போம்! நன்மை பெறுவோம்!**



## வாங்க பேசலாம்

- நட்பை வலியுறுத்தும் கதையை வகுப்பறையில் அங்க அசைவுகளுடனும் சரியான ஒலிப்புடனும் கூறுக.
- தவளையின் நற்குணத்தை உன் சொந்த நடையில் கூறுக





Tamil 3rd-std_Term3.indd 9 7/20/2019 5:43:13 PM

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. மரக்கிளையை உலுக்கியது ................

(அ) தேனீ (ஆ) ஒட்டகச்சிவிங்கி

(இ) தவளை (ஈ) சிட்டுக்குருவி

2. மரத்தூள் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) மரம் + தூள் (ஆ) மர + தூள்

(இ) மரத்து + தூள் (ஈ) மரத்+தூள்

3. திட்டம் + படி – இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது .............................

(அ) திட்டபடி (ஆ) திட்டப்படி

(இ) திட்டம்படி (ஈ) திட்டுபடி

4. மிதிபட்டு – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) மிதி + பட்டு (ஆ) மிதிப் + பட்டு

(இ) மீதி + பட்டு (ஈ) மீதிப் + பட்டு

5. இணைந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல் .............................

(அ) மகிழ்ந்து (ஆ) பிரிந்து

(இ) சேர்ந்து (ஈ) சிறந்து

X4D31U

### வினாக்களுக்கு விடையளிக்க.


1. தூக்கணாங்குருவிக் குஞ்சுகள் ஏன் கத்தின?
2. தூக்கணாங்குருவிக்கு உதவி செய்தவர்கள் யார் யார்?
3. தேனீ எதன் காதருகே சென்று கடித்தது?
4. இக்கதையின் மூலம் நீ அறியும் நீதிக்கருத்து யாது?


### அகர முதலியைப் பார்த்து பொருள் அறிக.

புத்திசாலி –

அடாத செயல் –

# குருவிக்கேற்ற கூட்டைத் தேர்ந்தெடுப்போமா?






**சரியான சொல்லை நிரப்பிப் படித்துக்காட்டுக.**

1. தூக்கணாங்குருவிக் குஞ்சுகள் -------- என ஒலியெழுப்பி மகிழ்ச்சியாக இருந்தன. (கீச்…கீச்….. / கூக்கு… கூக்கு)
2. மரத்தின் அடியில் -------- ஒதுங்கியது (ஒட்டகம் / ஒட்டகச்சிவிங்கி)
3. தூக்கணாங்குருவிக்கு முதலில் -------- உதவிக்கு வந்தது (மரங்கொத்தி / மீன்கொத்தி)
4. ஒட்டகச்சிவிங்கி அருகில் இருந்த -------- தொப்பென்று விழுந்தது. (ஆற்றில் / குளத்தில்)



Tamil 3rd-std_Term3.indd 11 7/20/2019 5:43:13 PM

## வினைமரபினை அறிந்துகொள்வோமா?
## பொருத்தமானதை உரிய கோட்டில் எழுதுக



__________________________



__________________________




__________________________



__________________________



__________________________

(மாத்திரை விழுங்குதல் , உணவு உண்ணுதல், பழம் தின்னுதல், பால் பருகுதல். தண்ணீர்குடித்தல்)



Tamil 3rd-std_Term3.indd 12 7/20/2019 5:43:14 PM

## சொல் விளையாட்டு

**ஒன்றை மாற்றினால் மற்றொன்று கிடைக்குமே!**

1. 'வெயில்'–இச்சொல்லில் "வெ" வை மாற்றி 'ம' வை நிரப்பு

   ஆடும் பறவை வரும் அழகாய் இருக்கும் – மயில்

2. 'மரம்' இச்சொல்லில் 'ம'வை மாற்றி 'அ' வை நிரப்பு

   அறுக்க உதவும் கருவியைப் பெறுவாய்_______

3. 'கூச்சம்' இச்சொல்லில் 'கூ'வை மாற்றி 'ம' வை நிரப்பு

   உன் அடையாளங்களில் ஒன்றைப் பெறுவாய் _______

4. 'குருவி' இச்சொல்லில் 'கு'வை மாற்றி 'அ' வை நிரப்பு


   குளித்து மகிழ்ந்து குளிர்ச்சி அடைவாய் _______

5. 'பணம்' இச்சொல்லில் 'ப'வை மாற்றி 'ம' வை நிரப்பு

   மூக்கின் வழியே நுகர்ந்து மகிழ்வாய் _______

## கலையும் கைவண்ணமும்

**வண்ண நூலினைப் படத்தின் மேல் ஒட்டி வண்ணம் தீட்டி வரைக.**



## அறிந்து கொள்வோம்

தலைகீழாகக் கூடுகட்டி
வாழும் பறவை
தூக்கணாங்குருவியாகும்

### சிந்திக்கலாமா?



உன் வீட்டுத்தோட்டத்தில் உள்ள மரத்தில் பறவையோ, அணிலோ கூடு கட்டினால் அதற்குத் தொல்லை தராமல் எவ்விதம் நடந்துகொள்ளலாம்? சிந்தித்து விடை கூறுக.



### செயல் திட்டம்

நாளிதழ்களில் வெளிவரும் விலங்குகளின் படங்களை ஒட்டிப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.



Tamil 3rd-std_Term3.indd 14 7/20/2019 5:43:14 PM

# 3 வீம்பால் வந்த விளைவு

ஓர் ஊரில் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் குதிரையில் சென்று வாணிகம் செய்து வந்தான். ஒருநாள் அன்றைய வேலையை முடித்துவிட்டுக் களைப்புடன் வந்த அவன், சற்றுநேரம் ஓய்வு எடுக்க நினைத்தான். தனது குதிரையை அங்கிருந்த மரத்தடியில் கட்டி வைத்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான்

அச்சமயம் வீரன் ஒருவன், தனது குதிரையுடன் அதே மரத்தடியில் ஓய்வெடுக்க வந்தான். வணிகன் அந்த வீரனிடம், "உங்கள் குதிரையை சற்றுத் தள்ளி கட்டுங்கள். ஏனெனில், எனது குதிரை முரட்டுத்தனமானது" என்றான். அதற்கு வீரன், "முடியாது நான் இங்குத்தான் கட்டுவேன்" என்று சொல்லிக் குதிரையைக் கட்டிவிட்டு உணவு உண்ணச் சென்றான்.

வணிகன் கண் அயர்ந்துவிட்டான். வீரன் உணவு உண்ணும் இடைவேளையில் வணிகனின் குதிரை, வீரனின் குதிரையை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டது. அதனால், வீரனுடைய குதிரையின் கால் உடைந்துவிட்டது. வீரன் உடனே வணிகனை எழுப்பினான். "என் குதிரையின் கால் உன் குதிரையினால் உடைந்துவிட்டதால், எனக்கு நஷ்டஈடு கொடு" என்று வணிகனிடம் கேட்டான் . அதனை வணிகன் ஏற்றுக் கொள்ளவில்லை. "நான் கட்டும்போதே என் குதிரையை முரட்டுக் குதிரை என்றேன். நீ தானே நான் சொன்னதை கேட்காமல் கட்டினாய்?" என்று வணிகன் மறுத்துவிட்டான்.





வணிகனே வா! நீதிபதியிடம் செல்லலாம்," என்றான் வீரன். இருவரும் நீதிபதியிடம் சென்றனர். வீரன் அவரிடம் நடந்ததைச் சொன்னான். நீதிபதி, வீரன் சொன்னதைக் கேட்டுவிட்டு, வணிகனிடம் "என்ன நடந்தது?" எனக் கேட்டார். வணிகனோ, பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தான். உடனே நீதிபதி, "வணிகன் ஊமை போலிருக்கிறதே, காதும் கேட்கவில்லையோ, பலமுறை கேட்டும் பதில் சொல்லாமல் இருக்கிறானே" என்றார்.

அதற்கு வீரன், "அவன் பேசுவான், ஐயா. அவன்தான் எனது குதிரை முரட்டுத்தனமானது உனது குதிரையை அருகில் கட்டாமல் தூரத்தில் கட்டு எனக் கூறினான். நான்தான், எனது குதிரை வீரக்குதிரை என்று சொல்லிக் கட்டி வைத்தேன்" எனக் கூறி முடித்தான்.

வீரன் கூறியதைக் கேட்ட நீதிபதி. "வீரனே!" வணிகன் எதுவும் கூறத் தேவையில்லை. நீயே உனது குற்றத்தை ஒப்புக் கொண்டாய். "வீம்புக் குணம் படைத்த உனக்கு, வணிகன் எந்த வகையிலும் நஷ்ட ஈடு தரத் தேவையில்லை" என்று தீர்ப்பு கூறினார்.

நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டதும், வீம்புக் குணம் படைத்த வீரன் முகத்தில் அசடு வழிந்தது. அதைக்கேட்ட வணிகன், "ஐயா நீதிபதி அவர்களே! நான் மௌனமாய் இருந்ததற்கு மன்னித்துவிடுங்கள்; உண்மையைப் புரிந்துகொண்டு நல்ல தீர்ப்பளித்தீர்கள்; மிகவும் நன்றி!" என்று கூறினான்.

**நீதிக் கருத்து: வீம்பு செய்தால் துன்பம் உண்டாகும்.**



Tamil 3rd-std_Term3.indd 16 7/20/2019 5:43:16 PM



## வாங்க பேசலாம்



- 'வீம்பால் வந்த விளைவு' கதையை உமது சொந்த நடையில் கூறுக.
- பால் பண்ணையில் வரிசையில் நின்று, பால் வாங்கும்போது ஒருவன் இடையில் குறுக்கே வந்து பால் வாங்கினால் நீ என்ன செய்வாய்?

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### வினாக்களுக்கு விடையளிக்க

XIM21I

1. வணிகன் எதில் சென்று வணிகம் செய்தான்?
2. வணிகன், வீரனிடம் என்ன கூறினான்?
3. வணிகனின் குதிரை, வீரனின் குதிரையை என்ன செய்தது?
4. 'வீம்பால் வந்த விளைவு' இக்கதையிலிருந்து நீ உணர்ந்து கொண்ட கருத்து யாது?

### புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

எதிரிகளை வீழ்த்துவான்;
நாட்டைக் காப்பான்.– அவன் யார்?



பந்தயத்தில் வேகமாய் ஓடிடுவான்;
பரிசுகள் பல வென்றிடுவான்.– அவன் யார்?



நான் இல்லையென்றால்,
நீங்கள் யாரையும் பார்க்க முடியாது.
நான் யார்?



பெரிய தேரைத்தாங்கும், ஒரு சிறிய பையன்






Tamil 3rd-std_Term3.indd 17 7/20/2019 5:43:17 PM

## மொழி விளையாட்டு

கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டுபிடித்து, வட்டமிட்டுப் பழங்களுக்குள் எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ | ணி | க | ன் | இ | உ | நீ |
| கி | ப | ம | ரு | வ | நூ | தி |
| த | ன் | கு | தி | ரை | ச் | ப |
| ஓ | கா | ல் | னி | தீ | செ | தி |
| ய் | வீ | ர | ன் | மி | ல் | தை |
| வு | கு | ண | ம் | து | ங் | வ் |





## மீண்டும் மீண்டும் ஒலிப்போமா?

1. மலையில் பழுத்த பழம் குலை குலையாய்த் தொங்குது
2. வாழைப்பழத்தோலில் நடந்து வழுக்கி விழுந்தேன். கீழே பார்த்தேன் 'வழவழ'ன்னு தரை இருந்தது
3. அழுத குழந்தை புரளுது. ஆளுக பார்த்தால் விழுதப் பிடிச்சு ஊஞ்சலாடுது

## விடுபட்ட சொற்களைப் படத்திலுள்ள எழுத்துகளைக் கொண்டு நிரப்புக.

1. வணிகன் ______________ அயர்ந்துவிட்டான்
2. ______________ குணம் படைத்த உனக்கு நஷ்டஈடு தரத் தேவையில்லை
3. வணிகனின் குதிரை, வீரனின் குதிரையை ______________ உதைத்துத் தள்ளிவிட்டது
4. வணிகன், வாணிகம் செய்துவிட்டு ______________ எடுக்க நினைத்தான்
5. வீரனுடையகுதிரையின்______உடைந்துவிட்டது.







Tamil 3rd-std_Term3.indd 18 7/20/2019 5:43:17 PM

# கலையும் கைவண்ணமும்

வண்ணமிட்டு மகிழ்க



## கட்டத்தில் உள்ள மூலிகைச் செடிகளின் பெயர்களை வட்டமிட்டு எடுத்து எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| து | ள | சி | ன் | ர் | பி | வ் | ளி |
| ம் | ச் | ற | கெ | பி | ர | க | கா |
| வ | ல் | லா | ரை | த் | ண் | வா | க் |
| ளை | ந | வ | ன | க் | டை | ற் | த |
| வ | ர | வெ | ற் | றி | லை | சா | த் |
| து | மெ | யா | ப் | கி | ம் | வ | ன் |
| தூ | செ | மை | ழை | றா | ற் | க | ம |

1. துளசி
2.
3.
4.
5.
6.
7.



Tamil 3rd-std_Term3.indd 19 7/20/2019 5:43:18 PM



**சிந்திக்கலாமா?**

மாலா, தின்பண்டம் வாங்கிச் சாப்பிட தன் பெற்றோரிடம் தினமும் பணம் கேட்பாள். தராவிட்டாலும் அடம்பிடித்து வாங்கிவிடுவாள்.

கயல்விழி, பெற்றோர் வாங்கித் தந்தால் மட்டுமே தின்பண்டம் சாப்பிடுவாள்.

## எதிலிருந்து எதைப் பெறுவோம் என்பதை விடுபட்ட இடத்தில் நிரப்புக

| மரம் | கொடி | செடி |
|---|---|---|
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |



Tamil 3rd-std_Term3.indd 20 7/20/2019 5:43:18 PM

# உயர்திணையும் அஃறிணையும்

எழிலி : "அப்பா, அப்பா, இங்கே வாங்க, இந்தப் பூனையைப் பாருங்க. காலெல்லாம் ஒரே சேறு. அந்தச் சேற்றுக் காலோட நம்ம வீட்டுக்குள்ளும் வந்திருக்கு".

அப்பா : "அட, ஆமா! எங்கேயிருந்து சேற்றைப் பூசிக்கொண்டு வந்ததுன்னு தெரியலேயே?"

எழிலி : "என்னப்பா, இது? தரையில என்ன இருக்குன்னு இந்தப் பூனைக்குத் தெரியாதா? பார்த்து நடக்கலாம்ல."

அப்பா : "அது சரி, எழிலி, நீயா இருந்தா என்ன செய்வே?"

எழிலி : ஐ! நானா இருந்தா, கால்ல சேறு படாம ஒரே தாண்டா தாண்டி ஓடி வந்திருப்பேனே"

அப்பா : அதைத்தான் நானும் சொல்ல வர்றேன். சேற்றில் கால் பட்டால் அழுக்காகும்னு உனக்குத் தெரியுது. ஆனால், பூனைக்குத் தெரியலே. ஏன் தெரியுமா?

எழிலி : தெரியலயே, நீங்களே சொல்லுங்கப்பா.

அப்பா : ஏன்னா, நாமெல்லாம் உயர்திணை. விலங்கு, பறவையெல்லாம் அஃறிணை. அதனாலதான், என்ன நடக்கப்போகுதுன்னு நமக்குத் தெரியுது. ஆனா, விலங்கு, பறவைக்கு நாம என்ன செய்றோம்? செய்தா என்னாகும்னு புரிந்துகொள்ள முடியல.

எழிலி : ஓ! அதுதானா? அது சரிப்பா, உயர்திணை, அஃறிணைன்னு சொன்னீர்களே, அப்படின்னா என்னப்பா?

அப்பா : நான் கேட்கிறதுக்கு முதல்ல விடை சொல்லு, உன்னைச் சுற்றி யாரெல்லாம் இருக்காங்க?

எழிலி : இம். இம்... நீங்க, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி, சிற்றப்பா, பெரியப்பா, அத்தை அப்புறம்...என்கூட விளையாடுவாங்களே மீனா, ரோசி, கம்ரூன், பாபு, சுரேஷ், கௌதம், சீனு, ராதிகா, ரம்யா, ஐசு, சிருஷ்டி, பாரு, வித்யூன்.....

அப்பா : போதும்....போதும். உனக்கு நிறைய நண்பர்கள் இருக்காங்கன்னு எனக்குத் தெரியும். உன்னைச் சுற்றி இருக்கிறவங்கன்னு நீ இப்ப சொன்னேல, இவங்க எல்லாருக்கும் உயிரிருக்கு. அதுமட்டுமா? நல்லது எது? தீயது எதுன்னு பகுத்துப் பார்க்கும் பண்பும் இருக்கு. இவங்க மட்டுமில்லாம நம்மைப்போலவே பண்புகள் இருக்கிற மக்கள், தேவர், நரகர் இவங்களையெல்லாம் உயர்திணைன்னுதான் சொல்றாங்க. அதுசரி, எழிலி. நீ இன்னும் வேறெ என்னல்லாம் உன்னைச் சுற்றி இருக்குன்னு சொல்லலியே?



Tamil 3rd-std_Term3.indd 21 7/20/2019 5:43:18 PM

எழிலி : வேறே என்னப்பா இருக்கு?

அப்பா : இதோ இந்த நாற்காலி, மேசை, குடம், மின்விசிறி, புத்தகம் இதுமட்டுமல்லாம பூனை, நாய், மாடு, ஆடு முதலான விலங்குகள், கோழி, காகம், குயில், மயில், கிளி முதலான பறவைகள் அப்படின்னு நிறைய பார்க்கிறாய் அல்லவா! இவற்றில் பறவை, விலங்குகளுக்கு எல்லாம் உயிர் இருக்கு. ஆனால் நாற்காலி, மின்விசிறி இவை போன்றவற்றிற்கு உயிரில்லை. அதனால, இந்த மாதிரி உயிருள்ள, உயிரற்ற பொருள்களெல்லாம் உயர்திணைல சேர்க்க முடியாது. இவையெல்லாம் உயர்திணை அல்லாத திணை. அதனாலதான் அஃறிணைன்னு சொல்றோம். நிலம், நீர், மலை, மரம், கடல் இவையெல்லாம்கூட அஃறிணைதான்.

எழிலி : ஆனா நான் பார்க்கிற பொருள்ல இதுதான் உயர்திணை, இதுதான் அஃறிணைன்னு எப்படிப்பா கண்டுபிடிக்கறது?

அப்பா : அடடே, நீ நல்லாவே யோசிக்கிற எழிலி. ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பேரு இருக்குல்லே, அதை வைத்து நீ எளிதாக் கண்டுபிடிக்கலாம். அந்தப் பெயரை வைத்தே அதற்கு உயிரிருக்கா, நம்மைப்போல அது சிந்திக்குமா? வேலை செய்யுமான்னு கண்டுபிடிக்கலாம்ல. பெயரை வைத்தே என்ன திணை, பால், எண், இடம்னு எல்லாத்தையும் கண்டுபிடிக்கலாம். இதைப்பற்றி இன்னும் விரிவா நாளைக்குச் சொல்றேன். இதுவரைக்கும் சொன்னதில என்ன புரிஞ்சுக்கிட்டன்னு எனக்கும் தெரியணும்ல தென்னை மரம் உயர்திணையா, அஃறிணையா, எங்கே சொல்லு பார்க்கலாம்.

எழிலி : இம்... இம்.மரமெல்லாம்அஃறிணைதானே.தென்னைமரம்அஃறிணைதாம்பா. இப்ப நல்லாப் புரிந்துகொண்டேன் அப்பா.

திணை என்பது, ஒழுக்கம். அதன் அடிப்படையில் உயர்திணை, அஃறிணை என இரண்டாகக் கூறுவர்.

## எது உயர்திணை? எது அஃறிணை?

### பிரித்து அறிவோமா?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வாளி | கன்று | மீன் | முருகன் | பசு | கழுதை | குருவி |
| வண்டு | தேனீ | செல்வி | ஒட்டகம் | எறும்பு | குழந்தை | மரங்கள் |
| சிறுமியர் | நாற்காலி | மேசை | மின்விசிறி | சிறுவர் | விலங்கு | பறவை |



Tamil 3rd-std_Term3.indd 22 7/20/2019 5:43:18 PM







## செயல் திட்டம்



உங்கள் வீட்டில் நீங்கள் காணும் பொருள்களை உயர்திணை, அஃறிணை என்று வகைப்படுத்தி எழுதி வருக.

# 4 மழைநீர்

மழைநீர் வெள்ளம் ஓடியே
மண்ணில் வீணாய்ச் செல்லுதே
உழைப்பின் வியர்வை போலவே
உயர்வாய் எண்ண வேண்டுமே !

பொன்னும் பொருளும் போலவே
பொழியும் நீரும் செல்வமே
விண்ணின் கொடை என்பதில்
வியப்பு ஒன்றும் இல்லையே !

குளங்கள் ஏரி நிரம்புமே
குருவி கொக்கும் வாழுமே
வானின் அமுதம் சேமித்தே
வாழ்வைச் செம்மை செய்வமே !

நாடும் வீடும் செழிக்கவே
நல்ல தண்ணீர் வேண்டுமே
ஓடும் நீரைத் தேக்கியே
உலகின் பசியைத் தீர்ப்பமே !

உழவும் தொழிலும் ஓங்கவே
உற்ற துணை மழைதானே
வளமும் நலமும் நிறைந்திட
வணங்கி மழையைப்
போற்றுவோம்!

மனிதர் பறவை விலங்குகள்
மகிழ்ந்து வாழத்தேவையே
இனிய மழை வரும்போது
இல்லம் முழுதும் சேமிப்போம் !



MBUQFA



Tamil 3rd-std_Term3.indd 24 7/20/2019 5:43:20 PM



## வாங்க பேசலாம்

- பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழ்க
- மழை பற்றி ஏற்கெனவே நீ அறிந்த பாடலைப் பாடி மகிழ்க
- மழை உனக்கு எவ்வளவு பிடிக்கும் என்று உம் சொந்த நடையில் பேசுக



## ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக

| செல்லுதே | ஓடியே | போலவே | வேண்டுமே |
|---|---|---|---|
| __________ | __________ | __________ | __________ |
| __________ | __________ | __________ | __________ |

## முதலெழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுக

பொன்னும், பொழியும்

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

## இரண்டாவது எழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுக

மனிதர், இனிவரும்

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

## அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1) பொழியும் – ________________ 2) செம்மை – ________________

3) ஓங்குதல் – ________________ 4) இல்லம் – ________________



Tamil 3rd-std_Term3.indd 25 7/20/2019 5:43:20 PM

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தேக்குதல் – என்ற சொல்லின் எதிர்ச்சொல்--------------

அ) நீக்குதல் ஆ) தெளிதல்

இ) சேமித்தல் ஈ) பாதுகாத்தல்

2. வானின் அமுதம் – இச்சொல் குறிப்பது------------------

அ) அமிழ்தம் ஆ) அமிர்தம்

இ) சோறு ஈ) மழைநீர்

3. மழையாகுமே – இச்சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

அ) மழை + யாகுமே ஆ) மழையாய் + யாகுமே

இ) மழை+ ஆகுமே ஈ) மழையாய் + ஆகுமே

C53EU2

4. நினைத்தல் – இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்

அ) கூறுதல் ஆ) எண்ணுதல்

இ) மறத்தல் ஈ) நனைத்தல்

### 'பொன்னும் பொருளும்' இதுபோன்று 'உம்' சேர்ந்துவரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

____________________ ____________________

____________________ ____________________



Tamil 3rd-std_Term3.indd 26 7/20/2019 5:43:20 PM

# இணைந்து செய்வோம்

## பொருத்துவோமா?

| | |
|---|---|
| 1. நாடும் வீடும் | வேண்டுமே |
| 2. வளமும் நலமும் | சேமிப்போம் |
| 3.இல்லத்தில் நீரை | மழையாகுமே |
| 4. உற்ற துணை | செழிக்கவே |
| 5. உயிராய் எண்ண | நிறைந்திட |



## சிந்திக்கலாமா?

மழை பொழியும் போது மழைநீரைப் பாத்திரங்களில் பிடித்து வைக்கச் சொல்வார் மான்விழியின் அம்மா. ஆனால், மான்விழியோ ஓடும் நீரில் கப்பல் செய்து விளையாடியபடியே இருப்பாள். மழைநீரைச் சேமிக்கச் சொல்லி, மான்விழியின் அம்மா ஏன் கூறுகிறார்?

# கலையும் கைவண்ணமும்

## தேவையான பொருள்கள்

மண் குவளை அல்லது மின்னட்டை

வண்ணக்குழம்பு –பல நிறம்

தண்ணீர் வாளி

முக்கால் பாகம் நீர் நிரம்பிய வாளியில் வண்ணக் குழம்புகளைத் தேவையான அளவு சேர்க்க வேண்டும். (விரும்பிய வண்ணங்கள் ஒவ்வொரு மூடி) அந்த வண்ணக் குழம்பை, ஒரு குச்சியால் கலக்கவேண்டும். அதில், குவளை அல்லது மின்னட்டையை மூழ்கச் செய்து எடுக்கவேண்டும். இப்போது, அழகான வண்ணங்களுடன் கூடிய குவளை அல்லது மின்னட்டையைக் கண்டு மகிழலாம்.



Tamil 3rd-std_Term3.indd 27 7/20/2019 5:43:20 PM

## சொல்லக் கேட்டு எழுதுக

1) மழைநீர் 2) வெள்ளம் 3) குளங்கள் 4) தண்ணீர்

2) கொடை 6) வியர்வை 4) ஓங்குதல் 5) போற்றுவோம்

## இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் படித்துப் பார்ப்போம். விடுபட்ட இடத்தை நிரப்பி மகிழ்வோம்

| | |
|---|---|
| மாலா போலாமா? | கு _ கு |
| யானை பூனையா? | பா _ பா |
| மேளதாளமே | தா _ தா |
| மாறுமா? | கா _ கா |



### செயல் திட்டம்


மழைநீர் சேமிப்புத் தொட்டியுடன் கூடிய படத்தை வரைந்து வண்ணம் தீட்டி வருக.



Tamil 3rd-std_Term3.indd 28 7/20/2019 5:43:21 PM

# 5 காகமும் நாகமும்


காகம் ஒன்று ஆலமரத்தில் கூடு கட்டி வாழ்ந்து வந்தது
FIRH2C
காகம் வெளியே இரை தேடச் சென்றது
தினந்தோறும் பாம்பு ஒன்று வந்து முட்டைகளை உடைத்தது
தினந்தோறும் உடைந்த முட்டைகளைப் பார்த்த காகம் மிகவும் வருத்தம் அடைந்தது
காகம் தன் நண்பன் நரியிடம் அறிவுரை கேட்டது
நண்பனே! அந்தக் கொடிய பாம்பை அழிப்பதற்கு ஒரு வழி சொல்
இளவரசியின் விலையுயர்ந்த பொருள் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து முட்டைகள் இருக்கும் கூட்டின் அருகே போட்டுவிடு






Tamil 3rd-std_Term3.indd 30 7/20/2019 5:43:22 PM